முச்சந்தி முரளி




"அப்ப பொதுக்கட்டமைப்பையும் பிரிக்க ரணிலார் பிளான் பண்ணிட்டார் போல"


Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 260

திங்கட்கிழமை
12 ஒகஸ்ட் 2024

ஆடி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


# ஜனாதிபதித் தேர்தல் முடியும்வரை பொருட்கள் விநியோகம் நிறுத்தம்

## தேர்தல்கள் ஆணைக்குழு கடிதம்

கொழும்பு, ஒகஸ்ட் 12

மாவட்டச் செயலகங்களிலிருந்து பரவலாக்கப்பட்ட நிதியில் இருந்து கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் பிரதேச செயலகங்களால் விநியோகிக்கப்படுவதை உடனடியாக நிறுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு நாட்டிலுள்ள அனைத்து மாவட்டச் செயலகங்களுக்கும் கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளது.

11



## வேட்புமனுத் தாக்கலின்போது பலப்படுத்தப்படும் பாதுகாப்பு

### ட்ரோன்களும் பயன்பாடு

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் இறுதித்தினமான எதிர்வரும் வியாழன் அன்று தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ட்ரோன் கமராக்கள் பயன்படுத்தப்படுவதுடன்,

11



## ரணிலை சந்திப்போம்

### ஜனநாயகப் போராளிகள் கட்சி தெரிவிப்பு

வவுனியா, ஓக. 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்க் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளைப் பேச்சுக்கு அழைத்துள்ள நிலையில் தாம் கலந்துகொண்டு பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக ஜனநாயக

11

## பூநகரி விபத்தில் யாழ். இளைஞன் நேற்று உயிரிழப்பு

கிளிநொச்சி, ஓக. 12

மன்னார் - நாவற்குழி, ஏ - 32 பிரதான வீதியில் பூநகரி, பரமன்கிராயில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாண இளைஞன் ஒருவன் உயிரிழந்

11

## ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பெரமுனவைக் கைப்பற்றுவோம்

### ரணில் ஆதரவு பெரமுன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பொதுஜன பெரமுனவைக் கைப்பற்றுவோம் என்று சூளுரைத்துள்ளார் மொட்டுக் கட்சியின் ரணில் ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம்.சந்திரசேன.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எமது கூட்டணியின் பிரமாண்ட

11

## வாக்காளர் எண்ணிக்கையில் யாழ்.மாவட்டம் பின் தங்கல்

கொழும்பு, ஓக. 12

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர் அதிகரிப்பு வீதம் ஏனைய மாவட்டங்களை விட குறைவாகவே காணப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்காளர் அதிகரிப்பு வீதம் ஏனைய

11

## தனிமையிலிருந்த மூதாட்டி உயிரிழப்பு

### சந்தேகநபர் கைது

கொடிகாமம், ஓக. 12

சகோதரன் தோட்டத்துக்குச் சென்றவேளை வீட்டில் தனிமையில் இருந்த மூதாட்டி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீசாலை வடக்கு கொடிகாமத்தில் இடம்பெற்றுள்ளது.

11

## ரொஷான் ரணசிங்கவும் வேட்பாளராகக் களமிறக்கம்



கொழும்பு, ஓக. 12

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கவுள்ளதாக பொதுஜன பெரமுனக் கட்சியின் பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

11

## வடக்கு – கிழக்கில் சமஷ்டித் தீர்வுக்கு இணங்குபவரையே ஆதரிக்கலாம்!!!

### தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு முடிவு

வவுனியா, ஓக. 12

வடக்கு - கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுடைய ஆட்சி முறையை வழங்கத் தயாராக இருக்க வேண்டும். அதைச் சிங்கள மக்களுக்கும் அறிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யும் ஜனாதிபதி வேட்பாளரை இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரிக்கும் என

11

## மைத்திரியால் கைவிடப்பட்ட விஜயதாஸ ராஜபக்ச?

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதி வேட்பாளர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ச கார் சின்னத்தில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார்.

அத்துருகிரியவிலுள்ள ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கை அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தச் சின்னம் அறிவிக்கப்பட்டது.

இதன்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான

11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சட்டத்தின்முன் சகலரும் சமம்' தேர்தல் ஒழுங்குகள் பேணுக

*மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸாருக்கு அறிவுறுத்து*

கொழும்பு, ஓக. 12

**அரசமைப்பின் பிரகாரம் தேர்தல் சட்டவிதிகளைப் பின்பற்றத் தவறும் எவராயினும் அவரது பதவி நிலை மற்றும் இயலுமை உள்ளிட்ட காரணிகளைப் புறந்தள்ளி, அவர்களுக்கு எதிராக ஒரேவிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

-இவ்வாறு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவால் பொலிஸாரால் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களை உள்ளடக்கி வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அரசமைப்பின் பிரகாரம் சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலில் பங்கேற்பதற்கான உரிமை நாட்டுமக்களுக்கு உள்ளது. எனவே தேர்தல் காலப்பகுதியில் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் பக்கச்சார்பானவையாகவோ அல்லது குறித்தவொரு தரப்பினருக்கு சாதகமானவையாகவோ அமையாது உறுதிப்படுத்தவேண்டும்.

தேர்தல் சட்டங்களை எவ்வித பக்கச்சார்புமின்றி சகல வேட்பாளர்களுக்கும் ஒரேவிதமாக நடைமுறைப்படுத்தவேண்டும். மேலும் சுவரொட்டிகளை ஒட்டுதல், துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல், பதாகைகளைக் காட்சிப்படுத்தல், வேட்பாளரின் புகைப்படத்தைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின்போதும் அரசமைப்பு மீறப்படாதிருப்பதை பொலிஸார் உறுதிசெய்யவேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

## ரிஷாத் கட்சி ஆதரவு 14 இல் இறுதி முடிவு!

கொழும்பு, ஓக. 12

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பாக இறுதி முடிவை எதிர்வரும் 14 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்க உள்ளதாக கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மன்னார் உட்பட மேலும் பல மாவட்டங்களில் மக்கள் சந்திப்பை மேற்கொண்டு மக்களின் கருத்துக்கணிப்பைப் பெற்றுள்ளோம்.

கட்சியினுடைய உறுப்பினர்கள் இரண்டு வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் உள்ளமையால் எதிர்வரும் 14 ஆம் திகதி எமது இறுதி முடிவை அறிவிக்கவுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-56)

## சுதர்ஷனி பெர்னாண்டோ ஐ.ம.சக்தியுடன் இணைவு

கொழும்பு, ஓக. 12

2020 பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டுத் தெரிவான கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான விசேட மருத்துவர் நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து கொண்டார்.

பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்துள்ள இவர், கடந்த அரசாங்கத்தின்கீழ், ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோயியல் மற்றும் கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சராகப் பதவிவகித்தார். அத்துடன் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



### ரணில் ஆதரவு

## மகா கூட்டணி 16 இல் மலர்வு

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் தரப்புகள் இணைந்து உருவாக்கவுள்ள மகா கூட்டணி எதிர்வரும் 16 ஆம் திகதி மலரவுள்ளது எனத் தெரியவருகின்றது.

சுயாதீன வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 15 ஆம் திகதி வேட்புமனுத்தாக்கல் செய்யவுள்ளார். அதன்பின்னர் வழிபாடுகளில் ஈடுபடுவார். மறுநாள் 16 ஆம் திகதி கூட்டணி உதயமாகவுள்ளது. அன்றைய தினம் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு தெரிவித்து கூட்டணியில் இணைவார்கள் என அறியமுடிகின்றது. (ச-44)

## அநுரகுமாரவுக்கு பாதுகாப்புக் கவசம்

கொழும்பு, ஓக. 12

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவுக்குரிய பாதுகாப்பைப் பலப்படுத்த அந்தக் கட்சியின் அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஆதரவு பெருகிவருவதால், அரசியல் ரீதியில் அவர் இலக்கு வைக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாகவே இந்த முன்னாயத்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதற்கமைய அநுரவுக்கு ஏற்கனவே பாதுகாப்பு வழங்கிவரும் கட்சி தோழர்களுக்கு மேலதிகமாக தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ள ஓய்வுபெற்ற படை அதிகாரிகளை இணைத்து பாதுகாப்புக் கவசம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ச-44)



### ராஜபக்சக்கள்

## குடும்பத்துக்குள் குழப்பம்?

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பொதுஜன பெரமுன எடுத்துள்ள தீர்மானம் காரணமாக ராஜபக்ச குடும்பத்துக்குள் கருத்துவேறுபாடுகள் எழுந்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்சவும், இராஜாங்க அமைச்சர் சஸீந்திர ராஜபக்சவும் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதுடன் அவருக்கே கட்சி ஆதரவளிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியியாகியுள்ளன.

மஹிந்த ராஜபக்சவின் ஏனைய புதல்வர்களும் இதே நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாகத்தகவல்கள் வெளியாகின்றன. யோஷித, ரோஹிதவின் சந்தைப்படுத்தல் நிறுவனத்தைச் சேர்ந்த குழுவிடம் ரணில் விக்கிரமசிங்கவின் பரப்புரையை முன்னெடுக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ச)



## ஒற்றுமையை நிரூபிப்போம்

*நாமல் முழக்கம்*

கொழும்பு, ஓக. 12

ராஜபக்ச குடும்பத்துக்குள் குழப்பமான நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாக பொய்யான பரப்புரைகள் செய்யப்படுகின்றன. பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச பரப்புரைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதும் ராஜபக்சக்களின் ஒற்றுமை நிரூபணமாகும் என்று நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ராஜபக்சக்களின் குடும்பத்துக்குள் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக வெளியாகிவரும் தகவல்கள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளராக நான் நிறுத்தப்பட்டமைக்கு கட்சியின் தீர்மானம் தான் காரணமாகும். இத்தருணத்தில் எமது குடும்பத்துக்குள் பிரச்சினைகள் என்று பரப்புரை செய்கின்றார்கள். அவற்றை நிராகரிக்கின்றேன். ராஜபக்சக்களின் ஒற்றுமை மேடைகளின் ஊடாக வெளிப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## ரணிலின் வெற்றிக்காக 150 அரசியல் கூட்டங்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதி செய்வதற்காக நாடு முழுவதும் அரசியல் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. அதற்கமைய, ஏறக்குறைய 150 அரசியல் கூட்டங்களை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. அவற்றில் 100 பிரதான கூட்டங்களாக இருக்கும். மீதமுள்ளவை ஆதரவு குழுக்களால் நடத்தப்படவுள்ளது. இந்தக் கூட்டங்களுக்கு ஹரின் பெர்னாண்டோ, மஹிந்தானந்த அளுத்கமகே, பிரசன்ன ரணதுங்க, வஜிர அபேவர்தன, ரமேஷ் பத்திரண, மனுஷ நாணயக்கார மற்றும் பலர் பிரதான பேச்சாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பவேண்டும்!

## இலங்கை அரசுக்கு ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி வலியுறுத்து

கொழும்பு, ஓக. 12

**இலங்கையின் ஆட்சி நிர்வாகம் என நோக்குகையில் நாட்டுமக்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய சமூகக்கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கும், மீளக்கட்டியெழுப்புவதற்கும் அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.**

-இவ்வாறு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அசூஸா குபோட்டா வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- அனைவரையும் உள்ளடக்கியதும், வெளிப்படைத்தன்மை வாய்ந்ததும், பொறுப்புக்கூறலைஉறுதிசெய்யக்கூடியதுமான செயன்முறையாக நாட்டு மக் களின் தேவைகளை நிறைவேற்றுவதே மறுசீரமைப்புகளின் மையப்புள்ளியாக அமைய வேண்டும். நிதியியல் கொள்கைத்தீர்மானங்கள் வரிவருமான வீழ்ச்சிக்கும், மிக உயர்வான பொதுத்துறை செலவினங்களுக்கும், ஏற்றுமதிகளின் சுருக்கத்துக்கும், கடன் ஸ்திரத்தன்மை சீர்குலை வுக்கும் வழிவகுத்ததுடன், நாட்டை பெரும் பின்னடைவுக்குள் தள்ளியது. எனவே அந்த நெருக்கடிக்குள் மீண்டும் சிக்குவதைத் தடுப்பதற்கு ஆட்சி நிர்வாகத்துடன் தொடர்புடைய சில சவால்களில் இலங்கை அரசாங்கம் அவதானம் செலுத்தப்பட வேண்டும். அதேபோன்று வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ச-இ)

# அதிகாரப் பிடிப்பு இலகுவானதல்ல!

## பெரமுன தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 12

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் அதிகாரத்தை அவ்வளவு எளிதில் கைப்பற்றிவிடமுடியாது என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

புதிய சக்தியொன்றை கட்டியெழுப்புவதாகக் கூறிவிட்டே கட்சியிலிருந்து சென்றனர். அவ்வளவு எளிதில் மொட்டுக்கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிவிட முடியாது. நாமும் அரசியலில் தான் இருக்கின்றோம், முடிந்தால் கைப்பற்றி காட்டட்டும். இவ்வாறு சொல்பவர்கள் கடைசியில் மொட்டுக் கட்சிக்கு வந்துதான் சரணடைவார்கள். மனுஷ நாணயக்கார, ஹரின் பெர்னாண்டோஆகியோர் தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மதிக்கின்றோம். இவர்கள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த நடவடிக்கை வரவேற்கத்தக்கது. கட்சி கொள்கைகளுக்கு எதிராகச் செயற்படும் தரப்புகளுக்கு கட்சிகள் இவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-44)

# திருகோணேஸ்வர ஆலயத்தில் பழமைவாய்ந்த தாலி திருட்டு

## பொதுமக்கள் முறைப்பாடு

கொழும்பு, ஓக. 12

பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வர ஆலயத்தில் சோழர் காலத்தில் இருந்து நூற்றுக்கணக்கான ஆண்டுகள் போற்றிப் பாதுகாக்கப்பட்ட கோடி ரூபா பெறுமதியான தாலி களவாடப்பட்டுள்ளதாக பொதுமக்களால் அளிக்கப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் குரல் எழுப்ப ஆரம்பித்துள்ள நிலையில், ஆலய நிர்வாகத்தினர் இந்த விடயம் தொடர்பில் பொது மக்களை அமைதிப்படுத்த முயன்றதாகவும் கூறப்படுகின்றது.

பல நூறு கோடி ரூபா பெறுமதியான இரத்தினங்கள், வைடூரியங்கள் பொறிக்கப்பட்ட 5 பவுண் தாலி பல பூஜைகள் செய்யப்பட்டு சக்தி வாய்ந்ததாக இருந்தது எனவும் கூறப்படுகிறது.

அதேவேளை- இதுவரையில் திருக்கோணேஸ்வரம் ஆலயம் சார்பில் ஒருவரும் முறைப்பாடு செய்யவில்லை என்று பொலிஸ் தரப்பில் இருந்து தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# ஒழுக்காற்று நடவடிக்கை பின்வாங்கிய பெரமுன

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேர்தலில் ஆதரவளிக்கும் பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு எதிராக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்வரை ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என பெரமுனவின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர்களை கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழு அண்மையில் தீர்மானித்திருந்தது.

எனினும் பொதுஜனப் பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரை வெற்றி கொள்வது தொடர்பான செயற்பாடுகளில் இப்போது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)







## வாக்குகள் வரலாறாக வேண்டும்

நல்ல ஒரு தலைவன் நமக்கு வேண்டும் என்று
நல்லூரானே கொடியேறு!
நம் மண் பேறாக வேண்டும்,
வல்ல ஒரு தருணத்தில் வருகிறாய் வரம் கொண்டு
வாயெல்லாம் உன் நாமம் முருகா வாக்குகள்
வரலாறாக வேண்டும்

## பூத்துக் கொடியேறு

ஒரு ரூபாவோடு முருகன் இந்த
உவகை ஆள்கின்றான்
ஒவ்வொரு ஆண்டும் நல்லூரில்
அதியம் நடக்கிறது
பெரு வாழ்வுக்காய் நல்லூரான்
பேறுகள் தருகின்றான்
பூடுடைய ஒரு தலைவனுக்காய்
பூத்துக் கொடியேறுகின்றான்

அருமந்த பூமியை ஆள்வதற்கு
ஒரு தலைவன் வேண்டும்
அவசர உலகமதில் ஆபத்துகளோ
அருகிலே வந்துவிட்டது.
கருவிலே திருவான குழந்தைகள்
கண்டபடி வதைபடுகின்றனர்
கடவுளையே காசாக்கும் உலகமதில்
கோடிபெறும் கருணையே நீ முருகா!

■ கே.எஸ்.சிவஞானராஜா

# நல்லூர்த் திருவிழாவின் 4ஆம் நாள் நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், ஓக. 12

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

4ஆம் நாள் நிகழ்வு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அநிருத்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் சபனொளிபவன் முகுந்தன், சிறப்பு அதிதியாக உடுவில் பிரதேச செயலக நிர்வாகக் கிராம அலுவலர் சேனாதிராஜா ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

இணுவில் சிவகாமி அம்மன் அறநெறிப்பாடசாலை, இணுவில் இளம்தொண்டர்சபை அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் ஞானப்பழம் இசை நாடகம் இடம்பெறவுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.12

நல்லூர் மஹோற்சவ கால சிறப்பு நிகழ்ச்சியாக யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்கள், சற்குரு தரிசனப் பேச்சுகள், திருமுறை பாராயணம் மற்றும் பஞ்சாட்சர ஜெபம் என்பன செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தால் நடத்தப்படவுள்ளன.

நிகழ்வில் பங்குபற்ற விரும்புவோர் 077 6179027 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி)



# சான்றிதழ்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓக.12

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 2020 - 2021 கல்வியாண்டு மாணவர்களுக்கான தகைமைச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9 மணி மற்றும் மு.ப.11.30 என இரண்டு அமர்வுகளாக நடைபெற்றது.

நிழ்வில் மத்திய கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஜோன் குயின்ரஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு 237 ஆசிரியர்களுக்குப் பயிற்றப்பட்ட ஆசிரியர் தகைமைப் பத்திரங்களை வழங்கினார். (ரி-555,9)

# உண்டியல்கள் ஏலம்

கொழும்பு, ஓக. 12

130,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் எதிர்வரும் 14ஆம் திகதி ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, 91 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 60ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# மடுமாதா பெருவிழா ஏற்பாடுகள் பூர்த்தி

மன்னார், ஓக. 12

மன்னார் மருதமடு அன்னையின் பெருவிழாவுக்கு வருகைதரும் பக்தர்களின் நலன்கருதி ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மருதமடு அன்னையின் வருடாந்த ஆவணி மாத உற்சவம் கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தற்பொழுது நடைபெற்று வருகின்றது.

மடு அன்னையின் ஆவணி 15 ஆம் திகதி பெருவிழாவை முன்னிட்டு பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்களின் வருகை எதிர்பார்க்கப்படுகிறது .அதற்கமைய பொதுமக்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மடு ஆலயப் பகுதிக்கு வரும் மக்களுக்கு நியாயமான விலையில் தரமான உணவுப் பொருள்கள் வழங்குவதற்கும் போக்குவரத்துச் சேவையை ஒழுங்குபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார். (ச-60)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளால் பெருமை உண்டாகும். நன்மைகள் அதிகரிக்கும்.

**இடபம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். உறவினர்கள் மூலம் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். வியாபாரத்தில் பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மகிழ்ச்சி உண்டாகும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படலாம்.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமை மிக அவசியம். கூடுதலாக உழைக்கவேண்டி இருக்கும்.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். உடல் அசதி உண்டாகும். உறவினர்களுடன் ஏற்பட்ட மனவருத்தங்கள் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். வெற்றி உண்டாகும்.

**கன்னி:** முடிவுகள் எடுப்பதற்கு மிகவும் உகந்த நாள். ஆதாயம் உண்டாகும். எதிர்பாராத பணவரவும், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். பணியாளர்கள் ஒத்துழைப்பார்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் ஏற்படும். சற்று அலைச்சல் ஏற்படலாம். சிறுசிறு குழப்பங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நாள். உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். நண்பர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். ஆதாயம் கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும். ஆஞ்சநேயரை வழிபட எண்ணங்கள் நிறைவேறும்.

**மகரம்:** திடீர்ப் பணவரவுக்கும், திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பிரச்சினை வர வாய்ப்பு உள்ளது. மற்றவர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை. வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வீண் விவாதம் ஏற்படக்கூடும். மாலையில் சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். அம்பிகை வழிபாடு மனதுக்கு மகிழ்ச்சி தரும்.

**மீனம்:** எதிலும் சிந்தித்தும் பொறுமையுடனும் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். அலைச்சல் உண்டாகும். நண்பர்களால் காரிய அனுகூலம் ஏற்படும்.



# கௌரவிப்பு நிகழ்வு

கொடிகாமம், ஓக.12

போக்கட்டி அ.த.க. பாடசாலையில் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 35 வருட ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்து ஓய்வுபெறும் ஆசிரியர் ச.நந்தகுமாருக்கு சேவைநலன் பாராட்டு விழாவும், கடமைமாற்றலாகிச் சென்ற ஆசிரியை த.கஸ்தூரிக்கு பிரிவுபசார நிகழ்வும் நடைபெற்றன.

நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-159)



# பதவியேற்பு நிகழ்வு

சாவகச்சேரி, ஓக.12

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 47 ஆவது நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வு கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் கழகத் தலைவர் லயன் சு.நிதிகேசன் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பன்னாட்டு லயன்ஸ் கழகங்களின் 306 பி1 மாவட்ட உதவி ஆளுநர் லயன் பொஸ்கோ சில்வாவும் முதன்மை விருந்தினராகவும், கழக முன்னாள் ஆளுநர்களான லயன் மருத்துவர் வை.தியாகராசா, லயன் எஸ்.எஸ்.தங்கராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் மாவட்ட லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கழகத்தின் நலத்திட்டங்கள் முதன்மை விருந்தினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் களும் வழங்கப்பட்டன. (ரி-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# காவடிகள் பலவிதம் பவித்ரா தனிரகம்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இல்லையேல், பங்களாதேஷில் தற்போது இடம்பெற்றுவரும் கலவரங்கள்தான் இலங்கையில் ஏற்பட்டிருக்கும். இலங்கையின் நிலைமை மேலும் மோசமாகியிருக்கும் என்று இயம்பியிருக்கின்றார் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி. அமைச்சர் பவித்ரா மட்டுமல்ல, ரணிலின் முகாமுக்குள் சங்கமித்துள்ள பல அமைச்சர்களும், ஏன் ஜனாதிபதி ரணிலும்கூட இதேகருத்தை கடந்த ஒருவாரத்துக்குள் பல தடவைகள் பிரதியெடுத்திருக்கின்றனர். இதன்மூலம் அவர்கள் ஏதோவொரு செய்தியை மக்களின் மனங்களுக்குள் வலிந்து திணிக்க எத்தனிக்கின்றனர்.


பங்களாதேஷில் இடம்பெற்ற போராட்டங்களும், இலங்கையில் இடம்பெற்ற போராட்டங்களுக்குமான அடிப்படை ஒன்றாக இருக்கலாம். அதை மறுப்பதற்கில்லை. பொருளாதார நலிவுநிலையும், வேலையில்லாத் திண்டாட்டமும்தான் இந்த இரண்டு போராட்டங்களுக்குமான வேர்கள். ஆனால், போராட்டங்களின் பின்னரான மறுசீரமைப்பு என்பது ஒன்றல்ல. கலவரங்கள், படுகொலைகள் என விரும்பத்தகாத ஜனநாயக விரோத சம்பவங்கள் நிகழ்ந்தாலும், பங்களாதேஷில் இடம்பெற்ற போராட்டங்கள் அதன் நோக்கத்தை கண்டடைந்திருக்கின்றன. ஆனால், இலங்கையில் இடம்பெற்ற அரகலயவோ அதன் உண்மையான நோக்கத்தை கண்டுகொள்ளவில்லை. 'வென்றும் வெல்லாமலும்' என்ற நிலையிலேயே அரகலய அஸ்தமித்துப்போனது. அதுவே உண்மை.

பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அரசாங்கத்தை அடியோடு விலகுமாறே பங்களாதேஷில் இளைஞர்கள் வீதிக்கு இறங்கினார்கள். இன்று ஷேக் ஹசீனாவும் இல்லை. அவருடைய அரசாங்கமும் இல்லை. இளைஞர்கள் கைகாட்டிய - அவர்களின் நம்பிக்கையை வென்ற மொகமட் யூனுஸ் (பொருளாதாரத்துக்காக நோபல் வென்றவர்) என்பவரின் தலைமையில்தான் பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கம் தற்போது அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆட்சிப் பொறுப்பேற்ற யூனுஸ் செய்த முதலாவது நடவடிக்கை, போராட்டத்தை வழிப்படுத்திய இளைஞர்களை தன் அரசாங்கத்தில் இணைத்துக்கொண்டமைதான். ஆனால் இவ்வாறான ஆட்சி மாற்றம் இலங்கையில் நிகழ்ந்ததா?

கோத்தாபய ராஜபக்ச அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்டாலும், அவரின் கட்சியைச் சேர்ந்தவர்களும், நம்பிக்கைக்குரியவர்களும் அமைச்சுப் பதவிகளைத் தக்கவைத்தனர். ரணிலின் தலைமையில், ஓரிரு மாற்று முகங்களுடன், அமைச்சுகள் 'உள்ளகப் பரிமாற்றத்துக்கு' உட்பட்டனவே அன்றி நிலையான மாற்றமோ அல்லது மாணவர்கள் வலியுறுத்திய மாற்றமோ நிகழ்ந்ததாக இல்லை. இலங்கைக்கு மேலாகப் பறந்துதிரிந்த பிணம்தின்னிக் கழுகு, இந்தியாவின் உதவிகளாலேயே எட்டிப் பறக்க எத்தனித்தது. சர்வதேச நாணய நிதியமும் கரம்கொடுக்க இலங்கையின் திறைசேரி இயல்புற்றது. இதைத்தவிர ஜனாதிபதி ரணில் செய்ததென்று ஏதுமில்லை.

இவ்வளவு ஏன், இன்று பங்களாதேஷின் நிலைமையைக் கோடிகாட்டி ஜனாதிபதி ரணிலுக்கு வக்காலத்து வாங்கியிருக்கும் அமைச்சர் பவித்ரா, கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் சுகாதார அமைச்சராக இருந்தார். கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக பொங்கல் பானையை ஆற்றுக்குள் போட்ட 'அளப்பெரும் அறிவுத்தனம்' அவருடையது. 'பானையும் பவித்திராவும்' என முழுநீள நகைச்சுவைத் திரைப்படங்கள் தயாரிக்கப்படாத குறையாக அவர் சமூக வலைத்தளங்களை அன்று ஆக்கிரமித்திருந்தார். இயலாமைமிக்க அமைச்சரவையின் முதல் நபராக அவர் கொள்ளப்பட்டிருந்தார். ஆனால், இன்றும் பவித்ரா அமைச்சர்தான். சுகாதாரத்துறைக்குப் பதிலாக இன்று அவர் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் அவ்வளவே. இந்த மாற்றத்தைத்தான் இளைஞர்கள் கோரினார்களா? இந்த மாற்றத்தால் பொருளாதாரம் மேம்படுமா?

இன்னும் சொல்லப்போனால், இளைஞர்களின் போராட்டத்தை மௌனிக்கச் செய்து வரலாற்றுத் துரோகம் இழைத்தவர்தான் ஜனாதிபதி ரணில். துதிபாடுவதற்கும், மெச்சுவதற்கும் இதில் ஒன்றுமே இல்லை.



# தேர்தல் முடியும்வரை நாடாளுமன்றம் கலையாது

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆளுங்கட்சிக்கு 113 என்ற பெரும்பான்மை இல்லை என்ற காரணத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்க பிரதான எதிர்க்கட்சி உட்பட எதிர்க்கட்சிகளின் கூட்டணி திட்டமிட்டிருந்தது.

ஆனால், தற்போது ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரின் நாடாளுமன்ற உறுப்புரிமை இல்லாமற்போய், ஐக்கிய மக்கள் சக்திக்கு இரு ஆசனங்கள் அதிகரித்துள்ளன. ஆளும் கூட்டணி கட்சிகளின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கின்றனர். இவ்வாறானதொரு நிலையில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை யார் வசம் உள்ளது என்பதில் குழப்பநிலை உருவாகியுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் நாடாளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள பெரும்பான்மை குறித்த குழப்பங்களுக்குத் தீர்வுக்காணப்படவேண்டும் என்ற வலியுறுத்தலை எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ளன. இத்தகைய நெருக்கடியில் நாடாளுமன்றம் கலைக்கப்படுமா என்ற கேள்விக்கு அரசாங்கம் அதனை நிராகரித்துள்ளது. (ச-இ)

## அதிகரிக்கும் பணவனுப்பல்

கொழும்பு, ஓக. 12

கடந்த ஜூலை மாதத்தில் வெளிநாட்டுப் பணியாளர்களின் பணவனுப்பல் அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய கடந்த ஜூலை மாதத்தில் 3,710.80 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டுப் பணியாளர்களின் பணவனுப்பலில் கடந்த ஜூன் மாதத்தில் 10.3 சதவீதம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதேநேரம் இந்த வருடத்தின் முதல் 5 மாதங்களில் வெளிநாட்டுப் பணியாளர்களின் பணவனுப்பல் 28.9 சதவீதமாகப் பதிவாகியுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## வர்த்தகத்தில் பாதிப்பு சட்டவிதிகள் தளர்வு

யாழ்ப்பாணம், ஓக. 12

வர்த்தகத்தை பாதித்துள்ள பல சட்டவிதிமுறைகள் தளர்த்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். வர்த்தகர்களின் பணிகளுக்கு வசதியாகப் புதிய நிறுவன அமைப்பை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ச-இ)

## ஒலிம்பிக் குழுவில் இலங்கை வீரர்

கொழும்பு, ஓக. 12

சர்வதேச ஒலிம்பிக் குழுவின் விளையாட்டு வீரர்கள் ஆணைக்குழு உறுப்பினராக இலங்கையின் முன்னாள் பட்மின்டன் வீரர் நிலுக கருணாரத்ன தெரிவு செய்யப்பட்டுள்ளார். சர்வதேச ஒலிம்பிக் குழுவின் விளையாட்டு வீரர்கள் ஆணைக்குழுவுக்குத் தெரிவான முதலாவது இலங்கை வீரர் இவராவார். (ச-இ)

## வேட்பாளர் விவகாரம் உங்களுடன் இருக்கட்டும்

### மனோ எம்.பி. தெரிவிப்பு

தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரத்தை வடக்கு- கிழக்குக்குள் வைத்துக்கொள்ளுங்கள். அந்தக் கோரிக்கையுடன் வடக்கு- கிழக்குக்கு வெளியே வந்துவிடவேண்டாம். அவ்வாறு வந்தால் அதனை எதிர்ப்போம் .

-இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். பொதுவேட்பாளரை நிறுத்தக்கூடிய உரிமை தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இருக்கின்றது. எனினும், வடக்கு- கிழக்குக்கு வெளியில் மட்டும் அந்தக் கோஷத்துடன் வந்துவிடாதீர்கள் என்றுதான் சொல்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## நாளை

13.08.2024

செவ்வாய்க்கிழமை - ஆடி - 27

நான்காம் ஆடிச்செவ்வாய்

சுபநேரம் : 10.35 - 12.05

ராகுகாலம் : 03.05 - 04.35

## நாளொரு நல்வார்த்தை

உற்சாகமான உழைப்பு இல்லாமல் உயர்ந்த வெற்றி எதையுமே சாதிக்கமுடியாது.

-எமர்சன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. முக்கொம்பனுக்கு பஸ் சேவை நடத்துங்கள்

கிளிநொச்சி, ஓக.12

**கிளிநொச்சி - முக்கொம்பன் கிராமத்துக்கான பேருந்து சேவைகளை தொடர்ச்சியாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முக்கொம்பன் பொது அமைப்புகளால் இ.போ.ச. கிளிநொச்சி கிளை முகாமையாளரிடம் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சியில் இருந்து காலையில் புறப்படும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து பூநகரி, பள்ளிக்குடா, அரசபுரம், நேரடம்பன் வழியாக முக்கொம்பன் மகா வித்தியாலயம் வரை பணியில் ஈடுபட்டது.

கடந்த ஓர் ஆண்டாக இந்தச் சேவை இடம்பெறாதுள்ளதால் அரசபுரம், நேரடம்பன் பகுதி மாணவர்கள் பாடசாலைக்கு வந்து செல்வதில் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடுகிறது.

அத்துடன் அக்கராயன், பூநகரி மருத்துவமனைகளுக்கும் மக்கள் வந்து செல்வதிலும் நெருக்கடி நிலைமை காணப்படுகிறது.

எனவே முக்கொம்பன் கிராமத்துக்கான பேருந்துச் சேவைகளை தொடர்ச்சியாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ரி-13)



## மாதிரிச்சந்தை

கொடிகாமம் ஓக.12

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவின் மாதிரிச் சந்தை கடந்த வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பப் பிரிவு வளாகத்தில் அதிபர் க.உமாபாலன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பழைய மாணவரும் பொறியியலாளருமான சு.தினேஸ்பிரதமவிருந்தினராகவும், தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன் சிறப்பு விருந்தினராகவும், உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் பாடசாலை நிறைவேற்றுக்குழு செயலாளர் திருமதி ராஜராதிகா முருகானந்தா, ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-159)



## சைக்கிள்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓக.12

யாழ்ப்பாணத்தில் பொருளாதாரம் நலிவுற்ற 20 மாணவர்களுக்கு 20 சைக்கிள்களை தொழிலதிபர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வழங்கினார். தனது மகளின் பூப்புனித நீராட்டு விழாவை முன்னிட்டு இந்த அன்பளிப்பை அவர் வழங்கியுள்ளார்.

நிகழ்வில் இந்து, கிறிஸ்தவம், பௌத்தம் மற்றும் முஸ்லிம் மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வமதகுருக்களும் கலந்துகொண்டனர். (ரி-27)

## லயன்ஸ் கழகங்கள் விஸ்தரிக்கப்படும்!

யாழ்ப்பாணம், ஓக. 12

பன்னாட்டு லயன்ஸ் கழகங்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் தற்போதுள்ள ஆறு மாவட்ட கழகங்கள் 12 மாவட்டக் கழகங்களாக விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் வடபகுதிக்கென தனியான மாவட்ட லயன்ஸ் கழகம் உருவாக்கப்படவுள்ளது.

வடபகுதியில் தற்போது 47 லயன்ஸ் கழகங்கள் இயங்குவதால் புதிய லயன்ஸ் மாவட்டமாக அறிவிக்கப்பட்டு அதற்கான ஆளுநர் சபை அமைக்க முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளது. மாவட்ட லயன்ஸ் கழகங்களின் மாவட்ட கழகத்துக்கு ஆளுநர் முதலாவது உப ஆளுநர் இரண்டாவது உப ஆளுநர் மற்றும் பொருளாளர் ஆளுநர் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இயங்கும் பன்னாட்டு லயன்ஸ் கழகங்களின் 306 பி 1 மாவட்டத்தில் வடபகுதியில் மட்டும் 47 லயன்ஸ் கழகங்கள் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (ச-9)



## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக. 12

மின்னியலாளர்களுக்கான தேசிய தொழிற் தகைமை மட்டம் சான்றிதழ் வழங்கும் இலவச திட்டத்தை செயற்படுத்தும் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட பதில் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் கலந்துகொண்டார். யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய தொழிற் தகைமை மட்டச் சான்றிதழ் இல்லாத 18 மாதங்களுக்கு அதிகமான தொழில் அனுபவம் கொண்ட 160 மின்னியலாளர்களுக்கு முன் அனுபவக் கற்கை முறையூடாக தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழ் பதிவு மற்றும் விழிப்புணர்வுச் செயற்றிட்டம் ஆகியன நடைபெற்றது. (ச-9)

## துறைமுகத்தில் தீ விபத்து

கொழும்பு, ஓக. 12

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த சரக்கு கப்பலில் தீப் பரவல் மற்றும் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

துறைமுக தீயணைப்புப் பிரிவு உட்பட துறைமுக ஊழியர்கள் தீயை அணைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## செயற்பட்டு மகிழ்வோம்

கொடிகாமம், ஓக.12

மிருசுவில் குடும்ப முன்பள்ளிகளின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு மிருசுவில் குடும்பத் தலைவி யூடிற்லக்சினி கிறிஸ்ரியன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சட்டத்தரணியும், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான கே.சயந்தன் பிரதம விருந்தினராகவும், தென்மராட்சி கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளரும், முன்பள்ளி மேற்பார்வையாளருமான திருமதி ம.இராஜலக்ஷ்மி சிறப்பு விருந்தினராகவும், மிருசுவில் புனித நீக்கிலார் ஆலய பங்குத் தந்தை அருட்பணி எஸ்.ஜே.கியூ.ஜெயரஞ்சன் அடிகளார், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் சின்னங்கள் ஆணைக்குழு வெளியீடு

**யாழ்ப்பாணம், ஓக. 12**
**ஜனாதிபதித் தேர்தலுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கான தேர்தல் சின்னங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.**

தேர்தல்கள் ஆணைக்குழுவால் அதிவிசேட வர்த்தமானி மூலம் தேர்தல் சின்னங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் 206 சின்னங்கள் காணப்படுகின்றன.

வேட்பாளர்கள் அல்லது கட்சிகளை வாக்குச்சீட்டில் அடையாளம் காண்பதில் சின்னங்கள் முக்கியமான பங்கு வகிக்கும் என்பதால் இந்தப் புதுப்பிக்கப்பட்ட பட்டியல் தற்போது தேர்தல் ஆணைக் குழுவின் தலைவரின் கையொப்பத்துடன் சின்னங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பொலிஸ்மா அதிபரின்றி செயலிழக்கும் 'யுக்திய'

யாழ்ப்பாணம், ஓக. 12

பொலிஸ்மா அதிபர் ஒருவர் இல்லாத காரணத்தால் 'யுக்திய' நடவடிக்கைக்கு தடை ஏற்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பதவியில் இருந்த சந்தர்ப்பத்தில் 'யுக்திய' வெற்றியடைவதற்காக தினசரி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி அதிகாரிகளை சரியான முறையில் வழிநடத்தினார்.

எனினும் தற்போது அந்த நடவடிக்கை செயலிழந்து வருகிறது என்று டிரான் அலஸ் குறிப்பிட்டார். (ச-இ)



# இறந்து ஒதுங்கும் நண்டுகள்

கொழும்பு, ஓக. 12

திருகோணமலை நகரில் உள்ள கடற்கரையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை முதல் இலட்சக்கணக்கான சிறு சிவப்பு நிறத்திலான நண்டுகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

இந்தக் கடற்கரையில் மூன்று தொடக்கம் 4 கிலோ மீற்றர் தூரம் வரை இவ்வாறான சிவப்பு நிற நண்டுகள் இறந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# கசிப்புடன் ஒருவர் புத்தூரில் கைது

யாழ்ப்பாணம், ஓக. 12

புத்தூர் - பெரியபொக்கணை பகுதியில் 20 லீற்றர் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

புலனாய்வுத் தகவலுக்கமைய, மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை- குறித்த சந்தேகநபர் முன்பும் குற்றச்செயல்கள் தொடர்பில் பல தடவைகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ரி-23)



# ஆயுதங்களுடன் 7 பேர் கைது

கொழும்பு, ஓக. 12

இராஜகிரிய பிரதேசத்தில் ஆயுதங்களுடன் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் சிறைக்காவலர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். கைதானவர்களிடமிருந்து ரி-56 துப்பாக்கி, மைக்ரோ ரக துப்பாக்கி, 300 ரி-56 ரக துப்பாக்கித் தோட்டாக்கள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)

# எல்லைதாண்டி மீன்பிடி 35 இந்தியமீனவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 12

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 35 இந்திய மீனவர்களை வடமேற்குக் கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

வடமேற்குக் கடற்பகுதியில் குதிரைமலைமுனைக்கு அப்பால் கடற்பரப்பில் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட நான்கு இந்திய மீன்பிடிப் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மேலதிக சட்டநடவடிக்கைகளுக்காக கற்பிட்டி மீன்பிடி பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

## தினம் தெரியுமோ?

**அஞ்சாறுநாளா உந்த ஆஸ்பத்திரி விசயங்களை பட்சி எட்டிப்பாக்கேலை. ஆனாலும் அப்பிடிப் பாக்காமலும் விடேலாதுதானே. ஏனெண்டால் ஊரிப்பட்ட விசயங்கள் சொல்லவேண்டிக் கிடக்கே. அண்டைக்கு பிரைவேட் ஆஸ்பத்திரியில் அட்மிசன் போட்டிட்டு, பெரியாஸ்பத்திரியில ஒப்பிரேஷன் செய்யிற விசயத்தை பட்சி சொல்லியிருந்தது. அதேமாதிரி இன்னொரு விசயமும் நடக்கு. அண்டைக்கு சொன்னது, முதலே பிளான் போட்டு பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி, காசு உழைக்கிறது. இன்னொண்டு, தங்களில பழி வரக்கூடாது எண்டதுக்காகச் செய்யிறது.**

**பிரைவேட் ஆஸ்பத்திரியளில இசகுபிசகா ஏதும் ட்ரீட்மெண்ட் செய்து, வருத்தக்காரரை காப்பாத்த முடியாத நிலைமையோ இல்லாட்டி அங்க வைச்சு மருத்துவம் செய்யமுடியாத நிலைமையோ வந்தாலும், உடனேயே அவையை பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பிப் போடுவினம். கேட்டால், "நாங்கள் எல்லாம் வடிவாத்தான் செய்தனாங்கள், பெரியாஸ்பத்திரிக்காரர்தான் ஏதோ பிழையா மருந்தைக் குடுத்துப் போட்டினம்" எண்டு கதையை மாத்திப்போடுவினமாம். அதால இப்ப பிரைவேட் ஆஸ்பத்திரியளில இருந்து வாறவையை பெரியாஸ்பத்திரிக்குள்ள ட்ரீட்மெண்டுக்கு எடுக்கவேண்டாம் எண்டு வாய்மொழியாச் சொல்லப்பட்டிருக்காம். பணம் ஓரிடம், பாவம் ஓரிடம் எண்டு இல்லாமல், இனிமேல் பிரைவேற் ஆஸ்பத்திரிக்காரரே பணத்தோட சேர்த்து பழியையும், பாவத்தையும் சம்பாதிக்க வேண்டிய நிலை வந்திட்டு.**

**யாழ்ப்பாணத்தில பெரும் பிரச்சினையளைக் கிளப்பின ஆஸ்பத்திரி விசயங்கள் சிலது, இப்பிடி பிரைவேட் ஆஸ்பத்திரியள் செய்த பிழைக்கு பெரியாஸ்பத்திரி பலியாடானதால வந்ததுதானாம். ஆனால் தாங்கள் ஏதோ உத்தமர் மாதிரி இந்த விசயங்களில பிரைவேட் ஆஸ்பத்திரியள் 'கப்சிப்' எண்டு இருந்ததால, உயிரைக் காப்பாத்தவெண்டு கடைசி நேரத்தில வருத்தக்காரருக்கு இடம் குடுத்த குற்றத்துக்காக பழியையும் சுமந்து கொண்டு, ஊமை மாதிரி பெரியாஸ்பத்திரிக்காரர் இருந்திட்டினம். பிரைவேட் ஆஸ்பத்திரிக்காரர் தங்கட லாபத்துக்காக கொஞ்சச் சம்பளத்தோட உதவிக்கு நிக்கிற ஆக்களை வேலைக்கு எடுக்கினம். டாக்குத்தர் இல்லாத நேரங்களில இந்த உதவிக்கு வந்த 'அட்டெண்டர்மார்'தான் டாக்குத்தர் மாதிரி நடந்து கொள்ளுறதாலையும், பிரைவேட் ஆஸ்பத்திரியளில கனக்க பிரச்சினையள் வருகுது. சில பிரைவேட் ஆஸ்பத்திரியளின்ர நிர்வாகமும் அதுகளைக் கண்டும் காணாத மாதிரி நடக்கினம் எண்டு சனங்கள் புலம்புகினம். அந்த விசயங்களை நாளைக்கு பாப்பம்.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுடன் பெரமுன அரசியல் 'டீல்'

THE ROYAL COLLEGE OF JAFFNA
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை.
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில ஆசிரியர்
ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்
குபேரன் கட்ட மாடி, சங்கானை.
வேலை செல்வோருக்கு
மாலை 5 இல் இருந்து 9 மணி வரை.
Tel: 077 675 1649
(CS-55910) 1-1

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதி ரணிலுடன், பெரமுன அரசியல் டீலைக் கொண்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவுடன் டீல் இல்லையெனில், அவருக்கு ஆதரவு வழங்கியுள்ள உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்குவதற்கு பெரமுனவால் முடியுமா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

'ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சஜித்திடம் தமிழ் முற்போக்குக் கூட்டணி 47 கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. அவற்றை சஜித் ஏற்றுக்கொண்டுள்ளார். அதன் அடிப்படையிலேயே அவருக்கு நாம் ஆதரவு தெரிவித்துள்ளளோம். மேற்படி கோரிக்கைகளில் வீடமைப்பு, காணி உரிமை, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவுள்ளது. மலையக மக்களுக்கு 1988ஆம் ஆண்டில் அதாவது ரணசிங்க பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் வாக்குரிமை கிடைக்கப்பெற்ற பின்னரே அவர்களால் தேசிய நீரோட்டத்தில் இணைவதற்குரிய வாய்ப்புக் கிட்டியது. அதற்கு முன்னர் எல்லா வழிகளிலும் உரிமைகள் மறுக்கப்பட்டன. பிரேமதாஸவின் இந்த நடவடிக்கையால்தான் மலையகத்தில் மாற்றம் ஏற்பட ஆரம்பித்தது.

எனவே, அதற்கான நன்றிக் கடனாகவும் நாம் சஜித்தை ஆதரிக்கவேண்டும். ஊழல் ஒழிக்கப்படவேண்டும், நாட்டில் நல்லாட்சியே இடம்பெறவேண்டும், அதனை சஜித் செய்வார் என்ற நம்பிக்கையும் உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவால் ஊழலை ஒழிக்க முடியாது. ஏனெனில் கள்வர்கள் எல்லாம் இன்று அவர் பக்கமே அணி திரண்டுள்ளனர். சஜித் கீழ்மட்டத்திலிருந்து வந்தவர். எனவே, அவருக்கு மக்களின் வலி, வேதனை நன்கு புரியும். அதற்கேற்ற வகையில் உரிய முடிவுகளை எடுப்பார் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார். (ம-44)

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 31.05.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 27.08.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 28.08.2024 மற்றும் 29.08.2024

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் / பல்கலைக்கழகம், யாழ் /கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-222 2601 : 021-222 2602

PEOPLE'S BANK
Pride of the Nation

## குடும்பத் தலைவர் சடலமாக மீட்பு

சாவகச்சேரி, ஓக. 12

தவறான முடிவெடுத்து 33 வயதுடைய குடும்பத் தலைவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் மிருசுவில், தவசிகுளத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி மருத்துவமனையில் நேற்று இடம்பெற்ற உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ஒ-9)

# மரண அறிவித்தல்

## கனகரத்தினம் சரோஜா (லில்லி)



தோற்றம் 13.03.1956 மறைவு 01.08.2024

சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சரோஜா (லில்லி) அவர்கள் கடந்த (01.08.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கனகரத்தினம் (கனகு கராஜ் - திருநெல்வேலி) அவர்களின் அன்பு மனைவியும், ஜெயலதா (சுவிஸ்), சுஜாகர் (பிரான்ஸ்), ஷாலிகா (ஜேர்மனி), மற்றும் காலஞ்சென்ற ஜெயகாந்த் ஆகியோரின் அருமைத் தாயாரும், தர்மராஜா (சுவிஸ்), சசிக்குமார் (ஜேர்மனி), ஜெகந்தியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், வேதநாயகி மற்றும் காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, சிவபாலன், தங்கராசா, மகேந்திரன் ஆகியோரின் அன்பு சகோதரியும், கலாநிதி (பட்டு - கனடா), அரியமலர் (ஜெயந்தி) மற்றும் காலஞ்சென்றவர்களான நல்லையா, குலேந்திரராஜன், தவமணிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கணேஷ், குணம் மற்றும் காலஞ்சென்ற கோபால் ஆகியோரின் அன்பு மைத்துனியும், வர்ணிக்கா, ஹரிஸ், வருண், விகாஷன், திவாஷினி, ரிகாஷன், யாஷ்வினி, அதிஷன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2024) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணிமுதல் 11.30 மணிவரை (பிரான்ஸ் நேரம்) இடம்பெற்று தகனக்கிரிகை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :-
கனகரத்தினம் : +33 980 733 087
லதா : +33 767 260 784
+41 797 816 967
ராஜன் : 076 833 2114

தகவல்:
குடும்பத்தினர்
(CR/429...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச நிர்வாகக் கட்டமைப்பு டிஜிற்றல்மயமாவது அவசியம்

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 12**

**அரச நிர்வாகக் கட்டமைப்பு நவீன மயப் படுத்தப்பட வேண்டியது அவசியம் என முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
காலம் கடந்த சுற்றறிக்கை அனுப்பும் முறையைக் கைவிட்டு அனைத்து அலுவலகங்களும் டிஜிற்றல் மயப்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் நேர விரயத்தை தவிர்த்துக்கொள்ளலாம்.
மக்கள் மயப்படுத்ப்பட்ட தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பை உருவாக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம் பொறுப்புக்கூறல், வெளிப்படைத் தன்மை என்பவற்றுடன் கூடிய ஒரு சிறந்த நிர்வாக கட்டமைப்பை உருவாக்க முடியும்.
இலங்கையின் பொதுத்துறை ஒழுங்காகத் திட்டமிடப்படவில்லை, வினைத்திறனற்ற ஆளணி, வேலைநிறுத்தங்கள் என்பன காரணமாக திட்டங்கள் மக்களைச் சென்றடைவது தாமதமாகிறது.
இலங்கையின் பொதுத்துறை தற்போது நவீனமும் மரபும் கலந்த ஒரு பொறிமுறையாக செயற்பட்டு வருகிறது.
இப்போதும் கோவைகளில் தான் சகல விவரங்களும் பேணப்படுகின்றன. ஒரு கோவை நான்கு அதிகாரிகளின் கைகளூடாகவே பயனாளியைச் சென்றடைகிறது. இதனால் வீண் காலதாமதம் ஏற்படுகிறது - என்றார். (ஒ-6)

# விமானத்தை அன்பளித்த அமெரிக்கா

கொழும்பு, ஓக. 12
சக்திவாய்ந்த கமராக்கள் பொருத்தப்பட்ட பீச்கிறாப்ற் விமானத்தை அமெரிக்கா இலங்கைக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.
கடல்சார் சட்டவிரோத நடவடிக்கைளை கண்காணிக்கவும் கட்டுப்படுத்த இந்த விமானம் பெரிதும் உதவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் நெருக்கடியான சூழ்நிலைகளில் பாதிப்புக்குள்ளானவர்களை மீட்டெடுக்கவும் மனிதாபிமான உதவிகளை விநியோகிப்பதற்கும் இது உதவும் எனக் கூறப்படுகிறது.
அமெரிக்க விமானப்படையினர் இலங்கை, மாலைதீவு இருநாட்டு விமானப்படையினருக்கும் வழங்கிய பயிற்சியின் இறுதி நாள் நிகழ்வில் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இந்த விமானத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (ஒ-6)

# பொதுக்கட்டமைப்பு ரணிலை சந்திக்காது

யாழ்ப்பாணம், ஓக. 12
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பில் தமிழ் மக்கள் பொதுச் சபையைச் சேர்ந்த 7 பிரதிநிதிகளும் பங்குபற்றமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதியின் செயலகத்திலிருந்து தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபை உறுப்பினர்கள் ஐவருக்கு தொலைபேசி அழைப்புகள் வந்தன.
இந்த அழைப்பில் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்குச் சந்திப்பு என்று கூறப்பட்டது. எதற்காக என்று கேட்கப் பட்டபொழுது பதில் கூறப்படவில்லை.
இச்சந்திப்பில் தமிழ் மக்கள் பொதுச் சபையைச் சேர்ந்த பிரதிநிதிகள் 7 பேர்களும் பங்கு பற்றமாட்டார்கள்.
அதேவேளை, தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களுக்கும் தொலைபேசி மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
இந்தச் சந்திப்பில், தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு என்ற அடிப்படையில் 14 உறுப்பினர்களும் சந்திப்பில் கலந்துகொள்ளமாட்டார்கள். தேர்தல் வேலைகளில் மூழ்கி இருப்பதால், குறுகியகால அழைப்பின் அடிப்படையில் சந்திப்பில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பாக கலந்துகொள்வது சிரமமாக இருக்கும். எதிர்காலத்தில் இது போன்ற அழைப்புகளை ஏற்று சந்திப்புகளில் கலந்து கொள்வது தொடர்பான முடிவை பொதுக் கட்டமைப்பு கூடி முடிவெடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

# பேசவேண்டியதை சொல்லுங்கள் பேச்சுக்கு நாங்கள் வருகிறோம்!

## ரணிலுக்கு பொதுக்கட்டமைப்பினர் கடிதம்

யாழ்ப்பாணம், ஓக. 12
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எங்களுடன் எதைப்பற்றிப் பேசவிரும்புகின்றார் என்பதைத் தெரியப்படுத்தினால் அது தொடர்பான ஆயத்தங்களுடன் பேச்சுக்கு வருகின்றோம் எனத் தெரிவித்து ஜனாதிபதி செயலகம் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளதாக தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பில் உள்ளவர்களை இன்று மாலை சந்திப்பதற்கு விரும்புவதாகத் தெரிவித்து ஜனாதிபதி செயலகத்திலுள்ள மேலதிக செயலரால் ஒவ்வொருவருக்கும் தொலைபேசி அழைப்பின் ஊடாகச் சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதைப் பேச விரும்புகின்றார் என்பது தொடர்பில் அழைப்பு எடுத்த மேலதிக செயலருக்குத் தெரியவில்லை. அதைக் கேட்டறிந்து கூறியபோதும் இதுவரை அவரிடமிருந்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.
இந்த நிலையில் ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பியுள்ளோம். அதில், ஜனாதிபதி எங்களுடன் என்ன பேச விரும்புகின்றார் என்பதைத் தெரிவித்தால் அதற்குரிய ஆயத்தங்களுடன் நாம் பேச்சுக்கு வருவோம் என்று குறிப்பிட்டுள்ளோம்" - என்றார். (அ-ஒ-5)

## மரண அறிவித்தல்

### வேலாயுதம் அரியநாயகம்



மலர்வு 08.02.1946 உதிர்வு 11.08.2024

ஸ்ரான்லி வீதியைப் பிறப்பிடமாகவும், கொய்யாத் தோட்டத்தை வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதம் அரியநாயகம் அவர்கள் நேற்று (11.08.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப் படும்.

தகவல்
குடும்பத்தினர்
26/2A புது வீதி,
கொய்யாத்தோட்டம்.
077 503 9237
077 883 6404

## 31ம் நாள் நினைவஞ்சலி

உருவாய் 02 . 04 . 1947



அருவாய் 13 . 07 . 2024

அமரர்
### இராஜேஸ்வரி செல்வரட்ணம்

திதி: [illegible]

"ஆண்டு குரோதியின் ஆனிமாதப் பூர்வபக்கம்
தாண்டிடும் அட்டமியே தன்திதியாய் மீண்டாளே
இவ்வுலக வாழ்வை இராசேஸ்வரியன்னை
செவ்வையுடன் சேர்ந்தாள் சிறந்து"
எமது குடும்ப விளக்கின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
பிறவுண் றோட், கொக்குவில் கிழக்கு.

(CS/55915) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதாகும் மீனவர்கள் தீர்வு கிடைக்கவில்லை

## ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் கடிதம்

**கொழும்பு, ஓக. 12**

**எமது மீனவர்கள் தொடர்ந்து சிறைபிடிக்கப்படும் சம்பவங்களால் மீனவ சமுதாயத்தினரிடையே வாழ்க்கையில் நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டுள்ளது. இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்கள் தொடர்பில் தீர்வு கிடைக்கவில்லை.**

-இவ்வாறு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் தொடர்கதையாக நீள்கிறது. ஆழ்ந்த வேதனையும் கவலையையும் அளிப்பதாக உள்ளது.

இதுபோன்ற கைது நடவடிக்கைகள், மீனவ குடும்பங்களின் மன நம்பிக்கையைக் குலைத்து நிதிச் சுமையை ஏற்படுத்தி அவர்களது பாரம்பரிய மீன்பிடித் தொழிலை கடினமாக்கி உள்ளது. அத்துடன் அவர்களின் வாழ்க்கையில் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுவிப்பதை உறுதி செய்யவும் இதுபோன்ற கைது சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தவும் வலுவான தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ச-இ)

# துரோகத் தீயில் அரசு உழலும்

## உதயகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 12

மலையக மக்களுக்குத் துரோகம் இழைக்கும் இந்த அரசாங்கத்துக்கு மக்கள் நிச்சயம் பாடம் புகட்டுவார்கள் என்று தொழிலாளர் தேசிய முன்னணியின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான உதயகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், தொழில் அமைச்சராகச் செயற்பட்ட மனுஷ நாணயக்காரவும் கொட்டகலைக்கு வருகை தந்து 1,700 ரூபா வழங்கப்படும் என உறுதியளித்தனர். மக்களை ஏமாற்றி பட்டாசு கொளுத்தி, பாற்சோறு சமைத்து நாடகங்களையும் அரங்கேற்றினர்.

ஆனால், இது ஏமாற்று நடவடிக்கை என்பது தற்போது உறுதியாகியுள்ளது. சம்பள உயர்வு தொடர்பில் வெளியான வர்த்தமானி அறிவித்தல்கூட மீளப்பெறப்பட்டுள்ளது.

மலையக மக்களுக்குத் துரோகம் செய்ததால்தான் இன்று நாடாளுமன்ற உறுப்புரிமையைக்கூட மனுஷ நாணயக்கார இழந்துள்ளார்.

தமக்குத் துரோகம் இழைந்த இந்தத் தரப்புகளுக்கு மக்கள் நிச்சயம் பாடம் புகட்டுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)




# தமிழக மீனவர் உயிரிழப்பு; கோவையில் போராட்டம்!

கொழும்பு, ஓக. 12

தமிழக மீனவர் உயிரிழப்புக்கு நீதிவேண்டி இலங்கை அரசைக் கண்டித்து இந்தியாவின் கோவை மாவட்டத்தில் கடைகளை மூடி முற்றுகைப் போராட்டம் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழக மீனவர்களை கொலை செய்யும் சிங்கள அரசை தண்டிக்கவேண்டும். உயிரிழந்த மீனவருக்கு நீதி வேண்டும் என்று கண்டன கோஷங்களை எழுப்பியவாறு தந்தை பெரியார் திராவிடக் கழகம், தமிழ்ப் புலிகள் கட்சி உட்பட பல்வேறு இயக்கங்கள் கடையை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

முற்றுகைப் போராட்டத்தையடுத்து பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டது. (ச-100)

# பதவி விலகியோரின் சொத்துகளைப் பெறுக

கொழும்பு, ஓக. 12

உத்தியோகபூர்வ பதவியில் இருந்து விலகிய அரச அதிகாரிகள் தொடர்ந்தும் பாவித்து வரும் அரச சொத்துகளை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், உள்ளூராட்சித் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாவட்டச் செயலர்களுக்குக் கடிதம் மூலம் இது அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# கிராம அலுவலர்களால் கறுப்பு வாரம் பிரகடனம்

கொழும்பு, ஓக. 12

சட்டப்படி வேலைசெய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ள அகில இலங்கை கிராம அலுவலர்கள் சங்கத்தினர் அடுத்த வாரம் முதல் கறுப்பு வாரத்தைப் பிரகடனப்படுத்தி எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

நாளை தொடக்கம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை ஐக்கிய கிராம அலுவலர்கள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க தெரிவித்துள்ளார்.

சேவையில் இருந்து விலகி செயற்படவுள்ளோம். கறுப்பு உடையணிந்தே கடமைகளுக்கு சமுகமளிப்போம். எனினும் பணிப்புறக்கணிப்புக் காரணமாக தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தப்படமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# தொழிலாளர்கள் வேதனம் முற்றுப்புள்ளி வைப்பேன்!

## ஜனாதிபதி உறுதி

கொழும்பு, ஓக. 12

தொழிலாளர் வேதன விவகாரத்தை நானே கையாளப்போகின்றேன். நாம் முன்வைக்கும் சம்பளத்தொகையை கம்பனிகள் வழங்க முன்வராவிட்டால் அதற்கான புதிய சட்டவரைவைக் கொண்டு வந்து நடவடிக்கை எடுப்பேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

வர்த்தக பிரமுகர்களுடனான சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருடம் பெருந்தோட்டக் கம்பனிகள் கணிசமான இலாபத்தை பெற்றிருக்கின்றன. தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தொழிலாளர் சம்பள விவகாரத்தைக் கையாண்டார். ஆனால், இப்போது அவர் அப்பதவியில் இல்லை. நானே தொழில் அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளேன். ஆகவே தொழிலாளர் வேதன விவகாரத்தை நானே கையாளப்போகின்றேன். குறைந்த வேதனத் திருத்தச்சட்டத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்து நிறைவேற்றுவேன். அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பேன்- என்றார். (ச-இ)

# நாமல் விலகினால் நாம் இணைவோம்

## சந்திரசேன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக.12

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜ பக்ச வேட்பு மனுத்தாக்கல் செய்யாமல் தவறைத் திருத்திக்கொண்டால் மீண்டும் பொது ஜன பெரமுனவுடன் ஒன்றிணைவோம். தன்னிச்சையாக எடுத்த தீர்மானத்தால் கட்சி பிளவடைந்துள்ளது என்று ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாகவே எமக்கு ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டது. இருப்பினும் ஒருதரப்பினரது தன்னிச்சையான செயற்பாடுகளால் தவறான தீர்மானம் எடுக்கப்பட்டது. ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச வேட்பு மனுத்தாக்கல் செய்யாமல் தவறை திருத்திக்கொண்டால் பொதுஜன பெரமுனவுடன் மீண்டும் இணைவோம் - என்றார். (ச)

மணிவிழா நாள் வாழ்த்து
12.08.2024
திருமதி தபோஆனந்தி கனகரத்தினம்




சேவைக் காலம்
- 22.03.1990 - 14.06.1994 யா/ மிருசுவில் அ.த.க பாடசாலை
- 15.06.1994 - 01.02.2015 யா/கொடிகாமம் அ.த.க பாடசாலை
- 02.02.2015 - 12.08.2024 யா/ கச்சாய் மகா வித்தியாலயம்.

ஆசிரியரின் சிறப்பான சேவையைப் பாராட்டி இந்நாளில் இறைவனருளுடன் பல்லாண்டு காலமாக சமூகப்பணி தொடரவும் ஓய்வுக் காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/ கச்சாய் மகா வித்தியாலயம்.
(CR/42916) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஜப்பான் உதவி

இலங்கையின் தொலைக்காட்சி ஒளிபரப்புத்துறையை டிஜிற்றல் மயப்படுத்துவதற்கு ஜப்பான் முன்வந்துள்ளது. 2019ஆம் ஆண்டு இலங்கையின் தொலைக்காட்சி ஒளிபரப்புத்துறையைடிஜிற்றல் மயப்படுத்துவதற்கு ஜப்பானிய அரசு முன்வந்தது. எனினும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. தற்போது இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜப்பானிய அரசு முன்வந்துள்ளது. இந்தத் திட்டத்திற்கென 17 பில்லியன் யென்னை ஜப்பானிய அரசு ஒதுக்கியுள்ளது.

தற்போது இலங்கையின் தொலைக்காட்சி ஒளிபரப்புத்துறை அனலொக் தொழில்நுட்பத்தினூடாகவே மேற்கொள்ளப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (ஒ.6)

## வாக்காளர்...

மாவட்டங்களை விட அதிகமாக காணப்படுகிறது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர் அதிகரிப்பு வீதம் 5.04 வீதமாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 12.9 சதவீதமாகவுள்ளது.

வாக்காளர் அதிகரிப்பு வீதம் குறைந்த மாவட்டமாக கேகாலை மாவட்டம் 4.9 வீதத்துடன் காணப்படுகிறது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் கடைசிக்கு முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-6)

## ஜனாதிபதித் தேர்தல்...

நுவரெலியா மாவட்டத்தின் ஒரு பிரதேச செயலகம் ஊடாக பல தோட்டப்பிரதேசங்களில் செயற்படும் அமைப்புகளுக்கு ஒலிபெருக்கிகள், பாத்திரங்கள், கூடாரங்கள் போன்றவற்றை விநியோகிக்கும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் அறிவிப்புச் செய்யப்பட்டிருந்ததாக நுவரெலியா மாவட்டச் செயலக அதிகாரிகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன.

தாம் சொல்லும் வரை குறித்த பொருட்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டாம் என்றும் தாம் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களுக்கு தோட்டங்களுக்கு வரும்போது அவற்றை விநியோகிக்க வேண்டும் எனவும் தோட்டத் தலைவர்களுக்கு ஓர் அரசியல் கட்சி உத்தரவிட்டிருந்ததாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதையடுத்து தேர்தல்கள் ஆணைக்குழுவானது பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலருக்கு கடந்த 9ஆம் திகதி திகதியிடப்பட்ட கடிதம் மூலம் மேற்படி செயற்பாடுகளை நிறுத்தும்படி கடிதம் அனுப்பியுள்ளது.

இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்பதாக குறித்தபொருட்களைவிநியோகிக்குமாறு தமக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால், ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் இவ்வாறான பொருட்களை விநியோகிப்பது பொருத்தமானதல்ல எனத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. இது சில வேட்பாளர்களை ஊக்குவிக்கலாம், மற்றவர்களுக்குப் பாதகமாக இருக்கலாம்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இந்தப் பொருட்களை விநியோகிக்குமாறு அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்◌ பணிப்புரை விடுக்க விரும்புகின்◌ன் என அக்கடிதத்தில் தேர்தல்கள் ◌ணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ,ஒ,இ)

## வடக்கு...

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழரசுக்கட்சியினுடைய நிலைப்பாடானது இணைந்த வடக்கு - கிழக்கிலே சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுடைய ஆட்சி முறை ஏற்படுத்தப்படுவதாகும். இதுவே எங்களுடைய அரசியல் நிலைப்பாடு. இதற்கு ஜனாதிபதி வேட்பாளர்கள் யாராவது இணங்கி வந்தால் அவர்களுக்கு ஆதரவு அளிக்கலாம் என்ற கருத்தும் கூட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. எனினும் இது தொடர்பில் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை.

ஜனாதிபதி வேட்பாளர்கள் அரசியல் அறிக்கையில் எவ்வாறான செய்தியை சொல்லப்போகின்றார்கள் என்பதைப் பார்க்கப்போகின்றோம். சமஷ்டிக் கோரிக்கைகளை ஏற்றால் அது தொடர்பில் விஷேடமாக சிங்கள மக்களுக்கு, அவர்கள் தமிழர்களுக்கு எதைச் செய்யப் போகிறோம் என்பதையும் அறிவிக்க வேண்டும்.

இது தவிர நாங்களும் எங்களுடைய நிலைப்பாட்டை எழுத்து வடிவில் தெளிவான ஓர் அறிக்கையாக வெளியிடுவோம். எங்களுடைய மக்களுக்கு, அரசியல் தலைமைத்துவம் வழங்குகின்ற கட்சி என்ற நிலைப்பாட்டில் அவ்வாறான ஒரு பொறுப்பை நாமும் உதாசீனம் செய்யாமல் வழிகாட்டல் அறிக்கையை ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வெளியிடுவோம்.

இதேவேளை - தமிழ்ப் பொதுவேட்பாளராக ஒருவரை நிறுத்துவது என்று சில அரசியல் கட்சிகளும் சில சிவில் அமைப்புகள் என்று சொல்லுபவர்களும் செயற்படுகின்றனர். அதுவும் இன்றைய கூட்டத்தில் அலசி ஆராயப்பட்டது.

இதற்கு முன்னரே இரண்டு கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடி இருக்கிறோம். கடந்த கூட்டத்தில் அரியநேத்திரன் சமுகமாகி இருந்தார். அந்தக் கூட்டங்களிலேயே நாங்கள் இப்போது இது தொடர்பில் தீர்மானம் எடுப்பதில்லை என சொல்லியிருந்தோம். எங்களுடைய மக்களோடும் எங்களுடைய கட்சி உறுப்பினர்களோடும் தொடர்ந்து கலந்துரையாடுவது அவசியம் என்று கூறப்பட்டிருக்கின்றது. எனினும் நாம் இதற்கு ஆதரவா? எதிர்ப்பா? என்று ஒரு தீர்மானமும் எடுக்கவில்லை.

ஆனால், இலங்கை தமிழரசுக் கட்சியினுடைய மத்திய குழு உறுப்பினராகிய அரியநேத்திரன் கட்சியுடன் உரையாடாமல் தன்னை தமிழ்ப் பொதுவேட்பாளராக அறிவித்தமை சம்பந்தமாக அவரிடம் விளக்கம் கேட்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவருடைய விளக்கத்தை கட்சிக்கு சொல்வதற்கு ஒருவாரகால அவகாசம் வழங்கப்படுகிறது. அதுவரைக்கும் கட்சி நிகழ்வுகள் எதிலும் அவருக்கு அழைப்பு அனுப்புவதில்லை என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது" - என்றார். (அ-ஒ-110)

## ரணிலை...

போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் துளசி தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதி 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அழைப்பு விடுத்துள்ளார். இந்நிலையில் பல்வேறுபட்ட பிரச்சினைகளும் தமிழர் தரப்பாகக் கலந்துரையாடவேண்டி இருப்பதன் காரணமாகவும் அவர் தற்போதைய ஜனாதிபதி என்ற ரீதியிலும் அவருடன் கலந்துரையாட நாம் தீர்மானித்துள்ளோம். இதன்போது பயங்கரவாதத் தடைச்சட்ட விடயம், அரசியல் கைதிகளின்விடுதலைபோன்றவிடயங்களிலும் நாம் கரிசனை காட்டுவோம்" எனத் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## ரொஷான்...

ரொஷான் ரணசிங்க அறிவித்தார். கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின்போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார். முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவும் நிகழ்வில் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதே எனது நோக்கமாகும். அதற்குரிய நடவடிக்கை நிச்சயம் முன்னெடுக்கப்படும். எனவே, தாய்நாட்டைக்காக்க மக்கள் ஆணை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் அவர் கூறினார்.

அமைச்சராக இருந்த ரொஷான் ரணசிங்க, சிறிலங்கா கிரிக்கெட் சபையுடன் முரண்பட்டதையடுத்து அவர் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-44)

## மைத்திரியால்...

மைத்திரிபால சிறிசேன உட்பட அவரின் தரப்பினர் எவரும் கலந்துகொள்ளாத நிலையில் விஜயதாஸ ராஜபக்சவுக்கு ஆதரவளிப்பதிலிருந்து மைத்திரி விலகியுள்ளார் எனக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-ஒ-இ)

## யாழ்...

துள்ளான். கொக்குவிலைச் சேர்ந்த சிறீகாந்தன் சிவதர்சன் (வயது - 27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பூநகரிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-113)

## வேட்புமனுத்...

ஸ்னைப்பர்கள் சகிதம் 4 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்ததாவது:-

"வேட்பாளர்கள், அவர்களுடன் வருபவர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் மீது கவனம் செலுத்தப்படும். விசேட அதிரடிப் படையினர், கட்டடத்துக்குள்ளும் அதன் அருகாமையிலும் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருப்பார்கள்.

வேட்புமனுக்கள் முற்பகல் 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். 30 நிமிடங்கள் ஆட்சேபனை தெரிவிக்க வழங்கப்படும்.

அதேவேளை, வேட்பாளருடன் சட்டத்தரணி உட்பட இருவர் மாத்திரமே வேட்புமனு மண்டபத்துக்குள் செல்லமுடியும்" - என்றார். (அ-ச-இ)

## ஜனாதிபதித்...

கூட்டத்தை 17ஆம் திகதி அநுராதபுரத்தில் நடத்தவுள்ளோம். முடிந்தால் இது போன்றதொரு கூட்டத்தை நடத்திகாட்டுமாறு பொதுஜன பெரமுனக் கட்சிக்குச் சவால் விடுக்கின்றேன். அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள 7 தொகுதிகளிலும் ரணில் விக்கிரமசிங்க அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறுவார்.

மொட்டுக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கமே உள்ளனர், நாம் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையமாட்டோம், அக்கட்சியின்கீழ் பொதுத்தேர்தலில் போட்டியிடவும்மாட்டோம்.

மொட்டுக் கட்சியின் உண்மையான உரிமையாளர்கள் நாம்தான், 100 வரையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமது பக்கம் உள்ளனர், பல நெருக்கடிகளுக்கு மத்தியில் நாமே மொட்டுக் கட்சியை உருவாக்கினோம். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் எமது கட்சியைப் பெறுவோம். அவ்வாறு கட்சி அதிகாரத்தைப் பெறமுடியாவிட்டால் அந்தப் பக்கம் உள்ளவர்கள் பெயரளவில் மட்டுமே செயற்பட நேரிடும். பிரதமர் தினேஷ் குணவர்த்தன சிறந்த இடதுசாரித் தலைவர், அவர்தான் எமது கூட்டணியின் தலைவர், அவரின் வழிகாட்டலுடன் பொதுத்தேர்தலில் போட்டியிடுவோம்" - என்றார். (அ-ஒ-44)

## தனிமையிலிருந்த...

அதேயிடத்தைச் சேர்ந்த நடேசபிள்ளை சரஸ்வதியாம்பாள் (வயது-80) என்பவரே உயிரிழந்தவராவார்.

மூதாட்டியின் உயிரிழப்பில் சந்தேகம் இருப்பதாக உறவினர்கள் தெரிவித்ததையடுத்து அயல்வீட்டில் வசிக்கும் நபர் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நியச் செலாவணி அதிகரிக்கவில்லை!

## தே.ம. சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக.12

நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு அதிகரிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத் திட்டங்கள் காரணமல்ல, நாட்டில் வசிக்கமுடியாது என்று கூறி, வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளவர்கள் அனுப்பிய பணமே -இவ்வாறு நாடாளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை வீழ்த்திய நாங்களே நாட்டை மீட்டெடுத்தோம் என்பதனைப்போன்று அரச தரப்பினர் கதைக்கின்றனர். வீழ்த்தியவர்களே நாட்டை மீட்டதாகக் கூறுவது வேடிக்கையாகவுள்ளது.

கடந்த 2022மற்றும் 2023இல் மாத்திரம் கிட்டத்தட்ட ஆறு இலட்சம் பேர் வரை இந்த நாட்டில் இருக்கமுடியாது என்று நாட்டை விட்டுச் சென்றுள்ளனர். இவர்களும் இதற்கு முன்னர் சென்றவர்களுமாக 40 இலட்சம் பேர் வரையிலானோர் வெளிநாடுகளிலுள்ளனர். அவர்களால் அனுப்பப்பட்ட பணத்தின் மூலமே அந்நியச் செலாவணி இருப்பு அதிகரித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# தமிழ்ப் பொதுவேட்பாளர்: பின்வாங்கப்போவதில்லை

## புளொட் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் நிச்சயம் போட்டியிடுவார், கடைசி நேரத்தில் பின்வாங்கப்போவதில்லை என்று புளொட் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

அத்துடன், தமிழ்ப் பொதுவேட்பாளர் பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படுகின்றார் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளையும் அவர் நிராகரித்துள்ளார்.

''தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் இந்திய தரப்பில் நேரடியாக எவ்வித கருத்தும் முன்வைக்கப்படவில்லை. அவர்களைப் பொறுத்தமட்டில் இது உங்களின் உள்பிரச்சினை என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர், இது பற்றி நாங்கள் கேட்டபோதுகூட அந்த பதிலே வந்தது. என்னிடம் எவ்வித கருத்தும் கூறப்படவில்லை. வேறு தரப்பினர்களிடம் கூறினார்களா எனத் தெரியாது.

தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் ஆராய்வதற்கு, பணிகளை முன்வைப்பதற்கு குழுவொன்று உள்ளது, அந்தக் குழுவால் விரைவில் அதற்குரிய பணி செய்து முடிக்கப்படும். எமது பிரச்சினை தீர்க்கப்படவில்லை, அது இன்னமும் கொதி நிலையிலேயே உள்ளது என்பதை தென்னிலங்கைக்கும், உலகுக்கும் காட்டவே தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளார்" - என்றார். (ஒ-44)


### வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

- சகல நாடுகளுக்குமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை.
- உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், எண்ணெய் வகைகள், கருவாடு என்பன எம்மூடாக அனுப்பிட முடியும்.
- கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் பொதிகள் சேவை.
321, K.K.S Road, Jaffna. 208, Galle Road, Colombo-06
077 755 4528

### JOB VACANCY / வேலைவாய்ப்பு




மன்னாரில் இருக்கும் எமது நளின் நிறுவனத்தின் கிளைக்கான வேலைவாய்ப்பு

- Showroom Manager - 1 Person (Male)
- Technician - 2 Person (Male)
- Service Center Assistant - 2 Person (Female)

Qualifications / தகைமைகள்

- குறித்த துறையில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- விண்ணப்பதாரி Vehicle License வைத்திருத்தல் கட்டாயமானது.
- நேர்காணலின் போது சம்பளம் மற்றும் சலுகைகள் பற்றி கலந்துரையாட முடியும்.

If you are interested to apply,
Please send your CV to this mail or Whatsapp.

NALIN Information Technologies(Pvt)Ltd
Computers of the North

Email – career@nit.lk
Contact No - 021 222 0808
077 542 7426


## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 03 . 1962
மறைவு 09 . 08 . 2024

### சாந்தினி திருவாதவூரன்

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை, சுன்னாகம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தினி திருவாதவூரன் அவர்கள் கடந்த (09-08-2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கல்லூரி அதிபர் தம்பையா கனகரத்தினம் - இராஜலக்சுமி கனகரத்தினம் ஆகியோரின் செல்வப் புதல்வியும், மார்க்கண்டு திருவாதவூரனின் (சட்டத்தரணியும் கணக்காளரும்) பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற கல்லூரி அதிபர் ஆறுமுகம் மார்க்கண்டு மற்றும் தவமணி மார்க்கண்டு (UK) ஆகியோரின் பாசமிகு மருமகளும், கனிஸ்கா கௌரிகரன் (UK), திருவாதவூரன் சங்கராத்மஜன் (UK) ஆகியோரின் அருமைத் தாயாரும், தாமோதரம் கௌரிகரனின் (UK) அன்பு மாமியாரும், றியா (UK), றிஷான் (UK) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மார்க்கண்டு சிவநேசன் (தீனதயாளன் - Australia), பக்தவத்சலா கெங்காதரன் (UK), மார்க்கண்டு ஆலாலசுந்தரன் (UK) மற்றும் மார்க்கண்டு கௌரிகரன் (UK) ஆகியோரின் அருமை மைத்துனியும், அரியநாயகம் லிங்கேஸ்வரனின் (UK) உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.


தகவல்:
மார்க்கண்டு திருவாதவூரன்
(கணவன் )
0765943329

210, கே.கே.எஸ் வீதி
சுன்னாகம் வடக்கு,
சுன்னாகம்.

(CS/55914) J-1

## நீங்கா நினைவலைகள்

13ஆம் ஆண்டு 14ஆம் ஆண்டு



பிறப்பு 05.02.1933
இறப்பு 30.06.2011

பிறப்பு 04.06.1935
இறப்பு 16.08.2010

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்

(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன முன்னாள் உத்தியோகத்தர்)

திதி: அபரபக்க சதுர்த்தசி (04.07.2024)

உங்கள் இருவரையும் தேடி ஊர் உலகம் தேடி
நாயாய் அலைகின்றோம் எப்போ கிடைப்பீர்கள்?
யாரைக் கேட்கிறது எங்கே ஆறுவோம்?

அம்மாவின் பிரிவுத்துயர் தாழாமல்
அவரோடு நீங்களும் சென்றது ஏன் தொடர்ந்து?
உங்கள் திருமண தினத்தன்று
அக்கினியில் நீங்கள் செய்துகொண்ட
சத்தியம் தான் காரணமோ?

வேதனைகள் வேர் வரை சென்றாலும்
விழுதுகளாய் எம்மைத் தாங்கினீர்கள்!
உங்கள் இருவரின் குரல் கேட்காமல்
பரிதவிக்கும் எங்கள் குமுறல்கள்
உங்கள் காதுகளில் கேட்கிறதா?

ஊர் விட்டு வந்து நம் சொந்த ஊருக்கு
திரும்ப முடியாமல் தவித்த தவிப்பும்
இப்போ ஊருக்கு போகு நிலை வந்தும்
போவதற்கு நீங்கள் இல்லையே அப்பா....

உயரங்கள் நாம் காண எம்
வாழ்க்கைப் பயணத்தில் துணையாய் இருந்த
ஈரிரண்டு கண்களையும் கண்கெட்ட
எமனுக்கோ பொறுக்கவில்லை

நாள்கள் வாரமாகி வாரங்கள் மாதமாகி
மாதங்கள் ஆண்டாகி போனாலும்
ஆறவில்லை எங்கள் துயர்

உங்கள் வார்த்தைகள் எம்மை வாழவைக்கும்
உங்கள் நினைவுகள் எம்மை வாழ்த்திடும்

### திருமதி பாக்கியம் பூபாலசிங்கம்

திதி: பூர்பக்க அட்டமி (12.08.2024)

அம்மா நீ சென்ற கணமும்
அம்மா நீ சொன்ன வார்த்தைகளும்
அம்மா நீ செய்த உன்னதங்களும்
அம்மா நீ தந்த நெறிகளும்
எம் நெஞ்சினில் என்றும் அழியாதம்மா
எழுகின்ற கேள்விகளுக்கெல்லாம்

நாளும் விடை தேடுகின்றோம் அம்மா!
எங்கள் வலிகளைத் தாங்க
யாருமே இல்லையம்மா
அப்பா அம்மா இல்லாத
அநாதைகளானோம் அம்மா
அந்த இறைவனே கண்ணீரைப் பரிசாகத் தந்து
மௌனம் காணுகின்றார் அம்மா

அன்பு அம்மாவே!
கொடிய நோய் வடிவில் காலன்
கொன்றுவிட்டானே உங்களை
அன்று மாலைவரை நீங்கள் புரிந்த அன்பு மழை
இன்னும் எம் கண்முன்னே வந்து செல்லுதம்மா.....

நாடு கடந்து வந்து நாம் உங்களைக் கண்டு
நாளும் பொழுதும் மகிழ்ந்து இருந்த கணங்களும்
மருமகளையும், பேரப்பிள்ளைகளையும்
நீ கொஞ்சிக் குலாவிய தருணங்களும்
என்றும் உங்களை நினைவூட்டுகின்றது அம்மா......

நீங்கள் எனக்காக கட்டிய வீடு
இன்று பாலைவனமாய் கிடக்கின்றது
நீங்கள் இன்று இருந்திருந்தால்
நீங்களாவது அந்த வீட்டில் இருந்திருப்பீர்களே அம்மா.......
உயிரைத் தந்து உடலில் சுமந்து
உலகில் வாழ உருவம் தந்த
தெய்வம் நீயம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
மகன் - 077 774 3185

மாதகல் மேற்கு,
மாதகல்.

(CS/28570) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.08. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org